(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 30.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 நவம்பர் 11 வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2536/2022

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிறுநீரக நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

2555/2022

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், மோசடி அல்லது சட்ட விரோதச் செயல் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துகள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் தெரிவிக்கப்பட்டுள்ள செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயல்களைத் தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

2568/2022

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தேவையான திரிபோஷா தற்போது வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) கப்புவத்த, ஜா - எலயில் அமைந்துள்ள திரிபோஷா தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றனவா என்பதையும்;

(iii) திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் உள்நாட்டில் பெற்றுக்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iv) இன்றேல், இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(v) இறக்குமதி செய்யப்படுமாயின், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள மூலப்பொருட்களின் அளவு மற்றும் இதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2591/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிழக்குப் பிராந்தியத்தின், பிரதான பிராந்திய அலுவலகம் கல்முனைப் பிரதேசத்தில் உள்ள கட்டடமொன்றில் வாடகை அடிப்படையில் பேணிவரப்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி அலுவலகத்தை அமைப்பதற்கு மட்டக்களப்புப் பிரதேசத்தில் பொருத்தமான காணி ஒதுக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டடம் எவ்வாண்டில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும்;

(ii) அதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

(iii) கட்டடத்தின் மாதாந்த வாடகைத் தொகை மற்றும் அது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து இற்றைவரை செலுத்தப்பட்டுள்ள மொத்த வாடகைத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணி, மேற்படி விடயத்திற்கு எவ்வாண்டில் ஒதுக்கப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி காணியில் உரிய கட்டடத்தை நிர்மாணிப்பதில் தாமதம் ஏற்படக் காரணமான விடயங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்தை நிர்மாணித்தல் தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) இவ்வலுவலகத்தை நிறுவும் போது, மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

2605/2022

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மறைப் பெறுமதியைப் பதிவுசெய்துள்ள வருடங்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திற்குமான பொருளாதார வளர்ச்சி வெவ்வேறாக யாது;

(iii) அந்த ஒவ்வொரு வருடத்திலும் நிதி அமைச்சர் பதவியிலும் ஜனாதிபதி பதவியிலும் கடமையாற்றியுள்ள நபர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி வருடங்களில் இலங்கையின் பொருளாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கு அப்போதைய அரசாங்கங்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

2625/2022

கௌரவ டீ. வீரசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படும் பிரிவெனாக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பிரிவெனாக்களில் கல்வி பயிலும் சாதாரண மாணவர்கள் மற்றும் பிக்கு மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) இப்பிரிவெனாக்களில் கடமையாற்றும் கல்விசார் பணியாட்டொகுதியையும் கல்விசாரா பணியாட்டொகுதியையும் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரிவெனாக்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2022 ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) புதிதாக பிரிவெனாக்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2633/2022

கௌரவ சம்பத் அதுகோரல,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறு போகம் மற்றும் பெரும் போகத்திற்குத் தேவையான பசளையை எதிர்வரும் காலப்பகுதியில் இடையறாது வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விதை நெல்லை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றளவில் விதை நெல் பல்வேறு விலைகளில் விற்கப்படுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) விதை நெல்லின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) களை நாசினிகளும் கிருமி நாசினிகளும் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) களை நாசினிகளினதும் கிருமி நாசினிகளினதும் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

(iii) இவற்றை நிவாரண விலையில் வழங்குவதற்காக இன்றளவில் அரசாங்கம் இடையீடு செய்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

2641/2022

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கைத்தொழிற்சாலைகள் மற்றும் வேறு நிர்மாணத் தளங்களிலிருந்து அதிகளவில் கழிவுகள் ஆறுகளில் இடப்படுகின்றன என்பதையும்;

(ii) சில நிர்மாணங்களுக்கு முறையான ஆய்வுகளின்றி சுற்றாடல் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆறுகளில் கழிவுகளை இடுகின்ற கைத்தொழிற்சாலைகள்/ நிறுவனங்களை விழிப்புணர்வூட்டி அவ்வாறு கழிவுகள் இடப்படுவதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆறுகளில் கழிவுகளை இடுகின்றதாக இன்றளவில் அடையாளங்காணப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைகள்/நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிற்சாலைகள்/ நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

2646/2022

கௌரவ காமினி வலேபோட,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையில் மனித குடியிருப்புகளாகவும் பயிர்செய்கை நிலங்களாகவும் இருந்த நிலங்கள் பின்னர் ஒதுக்கப்பட்ட வனங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக இப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் இன்னலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) இம்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு காரணமாக இன்றளவில் பதிவாகியுள்ள பிரச்சினைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் எற்படாமல் இருப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2887/2022

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்பிட்டி குடாநாட்டில் மாதுளை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதனை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அங்கு மாதுளை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலப் பரப்பு யாதென்பதையும்;

(iii) கற்பிட்டி குடாநாட்டில் மாதுளை பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவுரைகள் முறையாக கிடைக்கப்படாமை மற்றும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவது தொடர்பான தடைகள் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) அவற்றைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது
## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் 2022 ஒக்தோபர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2022 நவம்பர் 14 ஆம் திகதி, திங்கட்கிழமை பி.ப. 1.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சந்திரகுமார விஜய குணவர்தன.

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க.

3.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ க. துரைரெட்ணசிங்கம்.

4.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (வண.) பத்தேகம சமித்த தேரர்.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 1/2022

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 2/2022

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 3/2022

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 4/2022

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 5/2022

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா. 6/2022

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 7/2022

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 8/2022

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 9/2022

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா. 10/2022

கௌரவ புத்திக பத்திறண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 11/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— ஓய்வுபெற்ற கிராம அலுவலர்களுக்கு சமாதான நீதவான் பதவி வழங்குதல்,— கிராம மட்டத்தில் மக்களுக்கு மிக நெருக்கமாக சேவையாற்றும் தனிச்சிறப்பு வாய்ந்த அலுவலர்களான கிராம அலுவலர்கள் ஓய்வுபெற்ற பின்னர் அவர்களின் சேவையை கௌரவ சேவையாக தொடர்ந்தும் பெற்றுக்கொள்வதற்கு தற்போது ஓய்வுபெற்றுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஓய்வுபெறவுள்ள கிராம அலுவலர்களின் தகைமைகளின் அடிப்படையில் சமாதான நீதவான் பதவியை வழங்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா. 12/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை வலுவூட்டுதல்,— இலங்கையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இன்றளவில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதனால், அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் துரிதமான வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 13/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் உடல்ரீதியான தண்டனைகளை இலங்கையிலிருந்து இல்லாதொழித்தல்,— சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் உடல்ரீதியான தண்டனைகளையும் உளரீதியான துன்புறுத்தல்களையும் கண்டித்து 2021.02.12 ஆம் திகதி உயர் நீதிமன்ற வழக்கு இலக்கம் SC/FR/97/2017 மூலம் தண்டனைச் சட்டக்கோவையின் 341(i) ஆம் பிரிவை இரத்துச் செய்வதற்கும் UNCRC இன் இலக்கம் 19, 28(2) மற்றும் 37 ஆம் பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் கல்வி அமைச்சின் 12/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதனாலும், 2020.03.01 ஆம் திகதி 08 வயது சிறுமியொருவர் பிரம்பால் அடித்து வீட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களின் கவனம் செலுத்தப்பட்ட போதிலும் மேற்படி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலேனும் அது தொடர்பில் குறிப்பிடத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படாமையினாலும், சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய நீண்டகால பாதகமான விளைவுகளை வெளிப்படுத்தி 2018.02.02 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய குழுவின் (UNCRC) இலங்கை மீதான கண்காணிப்பு அறிக்கை மூலம் சிறுவர் பாதுகாப்பின் நெருக்கடியான நிலைமை, குறிப்பாக உடல்ரீதியான தண்டனைகளை முடிவுக்குக் கொண்டுவருவது வலியுறுத்தப்பட்டுள்ளதனாலும், 2020.10.06 ஆம் திகதிய பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கை இலக்கம் 304/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாரியளவில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சேவை சம்பந்தமாக திருப்தியடைய முடியாதென கல்வி அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டுள்ளதனாலும், துரிதமாக சட்டங்களைத் திருத்துவதன் மூலமும் தற்போதுள்ள சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா. 14/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையை நிறுவுதல்,— அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவாறும் கிராமிய மக்களுக்கு நெருக்கமாகப் பணியாற்றியவாறும் அளப்பரிய சேவையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்காக யாப்பொன்றைத் தயாரித்து "இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவை"யாக அதனை நிறுவுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா. 15/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— உரித்துடையவர்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை வழங்குதல்,— சமுர்த்தி பயனாளிகள் மற்றும் சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெறாத குறைந்த வருமானம் பெறும் மக்கள் தொடர்பில் முறையான ஆய்வினை மேற்கொண்டு, உண்மையாகவே சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெற வேண்டியவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு இதனை வழங்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா. 16/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதல்,— கல்வியியற் கல்லூரிகளில் முறையான ஆசிரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கியவாறு பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா. 17/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சமுர்த்தி நிவாரணத்திற்குப் பதிலாக பசுமாடு ஒன்றினை வழங்குதல்,— கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்திற்குப் பதிலாக ஒரு பசுமாடு வீதம் வழங்கி அவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா. 18/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— ஏற்றுமதியின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒரு விவசாய நாடு என்ற ரீதியில் விவசாயிகளுக்குத் தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் வழங்கி இறக்குமதிக்குப் பதிலாக ஏற்றுமதி ஊடாக பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

19.

பா. 19/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— இலங்கை கல்வி நிருவாக சேவையின் அலுவலர்களுக்கென நிலையான தேசிய இடமாற்றக் கொள்கையொன்றினைத் தயாரித்தல்,— இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை அதிபர் சேவை உட்பட கல்வித் துறையின் பதவிகளுக்கான நிலையான இடமாற்றக் கொள்கையொன்று இன்றளவில் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சிடம் உள்ள போதிலும், இலங்கை கல்வி நிருவாக சேவைக்காக இதுவரையில் தேசிய இடமாற்றக் கொள்கையொன்று உருவாக்கப்படாத காரணத்தினால் மேற்படி அலுவலர்கள் விரக்திக்கு ஆளாகியுள்ளதாலும், மேற்படி நிலைமையினைத் தவிர்ப்பதற்காக இலங்கை கல்வி நிருவாக சேவையின் அலுவலர்களுக்காகவும் தேசிய இடமாற்றக் கொள்கையொன்றினைத் தயாரித்தல் மட்டுமன்றி ஆசிரியர்/அதிபர் இடமாற்ற தேசியக் கொள்கையினைச் செயற்படுத்துவதற்காகவும் அரசாங்கம் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா. 20/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்தல்.— அபிவிருத்தியடைந்த நாடுகளில்கூட கமக்காரர்களுக்கென பல்வேறு நலன்புரி வேலைத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளதாலும், இலங்கையில் கமக்காரர்களுக்கென நடைமுறையிலுள்ள கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றப்படாமையால் அதன்பால் கமக்காரர்களை ஈர்ப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாலும், கமக்காரர்களுக்கு அதிகளவான நன்மைகள் கிடைக்கும் விதமாக இந்தக் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் அரசாங்கத்தினால் மீண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா. 21/2022

கௌரவ ரோஹண பண்டார,— கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்றை ஆரம்பித்தல்,— தற்போது நிலவும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக இன்றளவில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு பயன்தரக்கூடிய கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்று அரசாங்கத்தினால் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா. 22/2022

கௌரவ ரோஹண பண்டார,— உள்ளூராட்சி நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களை வழங்கும்போது நியாயமான கொள்கையொன்றைப் பின்பற்றுதல்,— பொது மக்களுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை முக்கியமான செயற்பொறுப்பினை நிறைவேற்றுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்களில் சிற்றூழியர், தொழிலாளர் முதலிய நியமனங்களை வழங்கும் போது பெரும்பாலும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் பிரதானியின் பிரிவுக்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தற்போது காணப்படுவதனால் இந்த நிலைமையை மாற்றியமைத்து குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் மேற்படி தொழில் வாய்ப்புக்களை பகிர்ந்தளிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா. 23/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா. 24/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா. 25/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா. 26/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

27.

பா. 27/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

பா. 28/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா. 29/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— புகையிரதப் பெட்டிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்,— புகையிரதத் திணைக்களம் பெருமளவு பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் கொண்டதொரு திணைக்களமாக இருப்பதாலும், இந்நாட்டிற்கு புகையிரதப் பெட்டிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்போது பெருந்தொகையான பணம் வெளிநாடுகளைச் சென்றடைவதாலும், இந்நிலையைத் தடுப்பதற்கு புகையிரதப் பெட்டிகளை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா.30/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கண்டங்கத்திரியை உள்நாட்டில் செய்கை செய்தல்,— கடந்த சில ஆண்டுகளாக கண்டங்கத்திரியை இறக்குமதி செய்ததன் காரணமாக பெருந்தொகையான பணம் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் அந்நிலையை தடுத்து நிறுத்துவதற்கு உள்நாட்டில் கண்டங்கத்திரி செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா.31/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— இஞ்சி செய்கையினை முன்னேற்றுதல்,— கடந்த சில வருடங்களாக இலங்கைக்கு இஞ்சி இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக பெருந்தொகையான பணம் வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் இந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு பெருமளவு பணம் சென்றடைவதைத் தடுப்பதற்காகவும், இஞ்சி செய்கையினை உள்நாட்டில் முன்னேற்றுவதற்காகவும் துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா 32/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா.36/2022

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட,— பயிர்களை சேதப்படுத்துகின்ற மந்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்,— இலங்கையில் விவசாயப் பயிர்களுக்கு வன விலங்குகளினால் பெரும் சேதங்கள் ஏற்படுவதாலும், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் அறிக்கைகளின் பிரகாரம் விலங்குகளால் ஏற்படுகின்ற பயிர்ச் சேதமானது வருடாந்தம் சுமார் 40% அதாவது, 1800 கோடி ரூபாய்களை விட அதிகமென்பதாலும், அதிலும் மந்திகளினால் விவசாயப் பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்படும் சேதங்கள் படிப்படியாக அதிகரிக்கின்ற காரணத்தினால் எமது நாட்டின் விவசாயப் பெரு மக்களுக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் நேரடி தாக்கம் ஏற்படுவதாலும், இலங்கை பௌத்த மற்றும் அகிம்சை நெறி கலாசாரத்துடன்கூடியதொரு நாடு என்ற வகையில் மந்திகளைக் கொல்வதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்ப்பதை அனுமதிக்க முடியாது என்பதாலும், விஞ்ஞானபூர்வமான செயன்முறையொன்றின் மூலம் மந்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

*34.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*35.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*36.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*37.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*38.

புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*39.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 மார்ச் 31 ஆம் திகதிய 2273/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*40.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

41.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.

இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.

றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61.

"மாத்தறைப் பருவம்" அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

62.

ரதன திஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

63.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

64.

ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

65.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

66.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

67.

களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

68.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

69.

இந்திரா புற்றுநோய் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

70.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.